# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN(Autonomous), VANIYAMBADI

(A Project of Sri Marudhar Kesari Jain Trust)

Recognised u/s2(f)&12(B) by UGC Act,1956-Permanently Affiliated to Thiruvalluvar University Accredited by NAAC with“A+” Grade(4thCycle)– An ISO21001:2018 EOMS Certified Institution

Supported by DST-FIST

## MARUTHAR MUTHAMIL MANDRAM ORGANIZED
## Thiraikalam -TAARE ZAMEEN PAR (MOVIE) –23.08.2024

## INVITATION

களம் : 1 திரை : 2

### திரைக்களம்

**மருதர் முத்தமிழ் மன்றம்**

தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
வாணியம்பாடி - 635751, திருப்பத்தூர் மாவட்டம்.

நாள் : 23.08.2024 நேரம் : பகல் 01.00 - 03.40 மணி இடம் : நூலக ஆய்வுக்கூடம்

"கலைகள் அனைத்திலும் அதி உன்னதமான கலை மனிதன் எப்படி இருக்க வேண்டும், எதைத் தேட வேண்டும் என்பதைப் போதிக்கும் கலையே ஆகும்".

\- பிளாட்டோ

**தாரே ஸமீன் பர் (TAARE ZAMEEN PAR) LIKE STARS ON EARTH**




2007 ஆம் ஆண்டில் அமீர்கான், அமோல் குப்தா ஆகிய இருவர்களால் இயக்கப்பட்ட இந்தி மொழித் திரைப்படம். பிலிம்பேர் விருது, தேசியத் திரைப்பட விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்ற மிக உன்னதமான திரைப்படம் இது.

டிஸ்லெக்சியா (Dyslexia) நோயால் அவதியுறுகிற மூன்றாம் வகுப்புப் பயிலும் எட்டு வயது சிறுவன் இஷான் அவஸ்தியைச் சுற்றிப் பயணிக்கிறது கதை. தன்னுடைய குறும்புகளால் பெற்றோர்களாலும் ஆசியர்களாலும் அடிக்கடித் தண்டனைக்குள்ளாகிறான் இஷான். தமது மனநிலையை யாரும் புரிந்து கொள்ளவில்லை என்ற ஆதங்கம் அவனுக்குள் உறைந்துபோய்க் கிடக்கிறது. ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் பள்ளிக்கு வெளியே சென்று தனியாகச் சுற்றித் திரிந்ததால் பள்ளியை விட்டு வெளியே அனுப்பப்படுகிறான். கடுங்கோபங்கொண்ட இஷானின் தந்தை அவனை வெகுதூரத்தில் உள்ள உண்டு உறைவிடப்பள்ளியில் சேர்த்து விடுகிறார். அங்கு இஷானின் தனிமையை உணர்ந்த ஓவிய ஆசிரியர், அவனது நோயை அறிந்து அவனுக்குள் ஒளிந்திருந்த ஓவியத் திறமையை வெளிக்கொணர்வதாகப் படம் நிறைவு பெறுகிறது. சமகாலத்தில் நிலவுகின்ற கல்விமுறை, ஆசிரியர்கள் மனநிலை, கல்வி குறித்தப் பெற்றோர்களின் பார்வை எனப் படம் பல்வேறு பொருண்மைகளைப் பற்றி விவாதிக்கிறது. வாருங்கள் படம் பார்க்கலாம். படம் குறித்த காத்திரமான உரையாடலைத் தொடங்கலாம்.

மருதர் திரைக்களம், தமிழாய்வுத்துறை, மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
வாணியம்பாடி.

PRINCIPAL
Marudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751

# REPORT

MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
VANIYAMBADI

(A Project of Sri Marudhar Kesari Jain Trust)

Recognized u/s2(f)&12(B) by UGC Act 1956–Permanently Affiliated to Thiruvalluvar University

Accredited by NAAC with "A" Grade – An ISO 21001:2018 Certified Institution

## MARUDHAR MUTHTHAMIL MANDRAM

## ORGANISE BY

## THIRAIKKALAM – 23.08.2024

## நிகழ்ச்சி அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | தாரே ஸமீன் பர்(திரையிடல்) | | |
| நிகழ்த்துனர் | மருதர் முத்தமிழ் மன்றம் | | |
| நிகழ்வு | திரைக்களம் | | |
| நிலை | மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி (தமிழ்த்துறை அளவிலான) | | |
| தேதி | 23.08.2024 | நேரம் | 01.00 pm -3.45pm |
| இடம் | நூலகஆய்வுக் கூடம் | நிகழ்வு முறை | முடக்கு நிலை |
| திறனாய்வாளர்கள் | முதுகலை மற்றும் இளங்கலைத் தமிழ் மாணவர்கள் | | |
| நிகழ்வு நோக்கம் | 1. திரைப்படம் பார்க்கும் நோக்கையும் போக்கையும் மாற்றும் விதம்.<br>2. திரைப்படம் குறித்த கலந்துரையாடல். | | |
| உட்புற பங்கேற்பாளர்கள் | மாணவிகள் : 97 | வெளிப்புற பங்கேற்பாளர்கள் | இல்லை |

### சுருக்கம்

வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரில் முத்தமிழ் மன்றம் சார்பாக "தாரே ஸமீன் பர்" என்ற திரைக்களம் இறைவணக்கம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. இதில் நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் உதவிப்பேராசிரியர் த. பூவிழி அவர்கள் வரவேற்புரையாற்ற, முனைவர் பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

மாணவர்களுக்குத் தாரே ஸமீன் பர் என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. திரைப்படம் முடிந்தவுடன் திரைப்படம் குறித்த கலந்துரையாடல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களிடையே நடந்தது. இக்கலந்துரையாடலின் மூலம் சமகாலத்தில் நிலவுகின்ற கல்விமுறை, ஆசிரியர்களின் மனநிலை, கல்வி குறித்துப் பெற்றோர்களின் பார்வை

ஆகியவற்றை மாணவிகள் கலந்துரையாடினார்கள்.

பாடப் பகுதிகளைக் கடந்து மாணவர்கள் திரையிலகில் எத்தகு திரைப்படங்களைப் பார்க்க வேண்டும் என்பதும் வெறுமனே பார்த்து விட்டுச் செல்லாமல் அதைக் குறித்த கலந்துரையாடல் தன்மையும் வளர்த்துக்கொண்டனர். மாணவர்களின் கலந்துரையாடலோடு இந்நிகழ்வு இனிதே அமைந்திருந்தது. இந்நிகழ்வில் தமிழ்த்துறை மாணவிகள் 97 பேர் கலந்துக்கொண்டு பயனடைந்தார்கள்.

நிறைவாக உதவிப்பேராசிரியர் த.பூவிழி அவர்கள் நன்றியுரையாற்ற நாட்டுப்பண்ணுடன் இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

## பயன்பாடு

1. திரைப்படத்தினை வெறுமனே பார்த்து விட்டுச் செல்லாமல் அதைக் குறித்து கலந்துரையாடல் தன்மையை வளர்த்துக்கொண்டனர்.
2. திரைப்படத்திலும் திறனாய்வுச் செய்யும் தன்மையினை வளர்த்துக் கொண்டனர்.

For S. Poongothai 27/11/24
தமிழ்த்துறைத் தலைவர்

27/11/24
முதல்வர்
PRINCIPAL
Marudhar Kesari Jain College for Women
Vaniyambadi - 635 751

**PHOTOS**



